**செய்தி வெளியீடு எண்:149** **நாள்:23.02.2021**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சிதம்பரனார், டாக்டர் சுப்பராயன் மற்றும் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் ஆகியோரின் முழு திருவுருவப்படங்கள் திறப்பு விழாவில் ஆற்றிய உரை:**

பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய சரித்திர நிகழ்வுகளை நிகழ்த்தி, ஏழை எளிய மக்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர் பொன்மனச்செம்மல், புரட்சித் தலைவர் எம்ஜிஆர் அவர்களையும் அவருக்குப் பிறகு உலகமே வியக்கும்வண்ணம் மிகச் சிறந்த ஆளுமையாக, நாட்டையும் நம்மையும் வழிநடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.

கப்பலோட்டிய தமிழன் திரு.வ.உ.சிதம்பரனார், முன்னாள் முதலமைச்சர் டாக்டர் P.சுப்பராயன், முன்னாள் முதலமைச்சர் **ஓமந்தூர் பி.இராமசாமி** ரெட்டியார் ஆகியோரின் திருவுருவப்பட திறப்பு விழா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கிற

சட்டப்பேரவைத் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் திரு.ப.தனபால் அவர்களே!

இந்நிகழ்ச்சியிலே பங்கு பெற்று கருத்துக்களை வழங்கி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே வரவேற்புரை நிகழ்த்திய மரியாதைக்குரிய சட்டப்பேரவை துணைத் தலைவர் முனைவர் பொள்ளாச்சி V.ஜெயராமன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மரியாதைக்குரிய எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களே!

வருகை தந்திருக்கின்ற மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே! மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே!

மற்றும் இந்நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற டெல்லி சிறப்பு பிரதிநிதி அவர்களே!

வாரியத் தலைவர் அவர்களே!

மற்றும் இந்நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற செக்கிழுத்த செம்மல் திரு.வ.உ.சிதம்பரனாருடைய பேரன் திரு.சிதம்பரம் வாலேஸ்வரன் மற்றும் கொள்ளுப் பேத்தி திருமதி செல்வி முருகானந்தம், முன்னாள் முதலமைச்சர் டாக்டர் P.சுப்பராயன் அவர்களின் கொள்ளுப் பேத்தி திருமதி சிவகாமி மற்றும் கொள்ளுப் பேரன் திரு.மோகன் குமாரமங்கலம் மற்றும் முன்னாள் முதலமைச்சர் திரு.ஓ.பி.இராமசாமி ரெட்டியார் அவர்களுடைய சகோதரர் பேரன் திரு.ஓ.பி.வெங்கடாசலபதி மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற அனைவருக்கும், பத்திரிகையாளர்களுக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வங்காளத்தில் விபின் சந்திரபாலும், பஞ்சாபில் லாலா லஜபதி ராயும், மராட்டியத்தில் பாலகங்காதர திலகரும் விடுதலைப் போராட்டத் தளபதிகளாக விளங்கிய காலகட்டங்களில், சுயராஜ்ஜியக் கொள்கையை அடிநாதமாகக் கொண்டு, இந்தியத் திருநாட்டிற்கு சுதந்திரம் வேண்டி தென்னிந்தியாவில் போராடிய விடுதலைப் போராட்ட வீரர்களில் மிகவும் முக்கியமானவர் நமது கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார் ஆவார்.

வழக்கறிஞர், பேச்சாளர், எழுத்தாளர், தொழிற்சங்கத் தலைவர், சுதந்திரப் போராட்ட வீரர் என பன்முகத் திறமை கொண்டு இந்த நாட்டிற்காக தன் உயிரையும் உடைமைகளையும் அர்ப்பணித்தவர் வ.உ.சிதம்பரனார் அவர்கள்.

வ.உ.சிதம்பரனார் அவர்களும் மகாகவி பாரதியாரும் சுதந்திரப் போராட்ட களத்தில் இணைந்து போராடி, பொதுமக்களிடம் விடுதலை வேட்கையைப் பொங்கி எழச் செய்தனர். அதுகண்டு, **“பாரதியாரின் பாட்டையும், வ.உ.சி. அவர்களின்**

**மேடை சொற்பொழிவு முழக்கத்தையும் கேட்டால், புரட்சி ஓங்கும்; அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்!"** என்று ஆங்கிலேயே நீதிபதி ஒருவர் தனது தீர்ப்பில் குறிப்பிட்டு, கடுமையான தண்டனை வழங்கியிருக்கிறார்.

இந்தியத் திருநாடு சுதந்திரம் பெறுவதற்காக சிதம்பரனார் சுதேசிப் பணியில் மூழ்கினார். நவம்பர் **12, 1906**–இல் '**சுதேசி ஸ்டீம் நேவிகேஷன்**' என்னும் நிறுவனத்தை நிறுவினார். தனது கப்பல் போக்குவரத்து நிறுவனத்தைத் தொடங்க இரண்டு நீராவி கப்பல்களை வாங்கினார். ஆங்கிலேயர்களுக்கு எதிராக தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கப்பல் விட்டதை வெறும் வணிகமாக அவர் நினைக்கவில்லை. கப்பலுக்காக தன் சொத்தை விற்றும் கடன் வாங்கியும், இரண்டு கப்பல்களுடன் போக்குவரத்தைத் தொடங்கினார். சுதேசி கப்பல் மக்களிடம் அதிக செல்வாக்கைப் பெற்றது. இது கண்டு ஆங்கிலேயர்கள் அஞ்சினர்.

புரட்சி மனப்பான்மையும், ஆங்கிலேயருக்கு எதிராக தைரியமாகச் செயல்படும் திறனும் இருந்ததால் அவரது '**பாரிஸ்டர்**' பட்டம் பறிக்கப்பட்டது. ஆனாலும் என்ன, இன்று நாடே '**கப்பலோட்டிய தமிழன்**' என்று அவர் புகழ் பாடுகின்றது.

சுதந்திரப் போராட்ட உணர்வைப் பொதுமக்களிடம் தூண்டியதற்காக கோயம்புத்தூர் கண்ணனூர் சிறைச்சாலையில் செக்கிழுக்க வைக்கப்பட்டார். அதனாலேயே நாம் அவருடைய தியாகத்தை நினைவுகூரும்வண்ணம் '**செக்கிழுத்த செம்மல்**' என்று அன்போடு அழைக்கிறோம்.

கப்பலோட்டிய தமிழர் அரசியல்வாதியாகவும், வழக்கறிஞராகவும் மட்டுமல்ல சிறந்த தமிழ் அறிஞராகவும் விளங்கியவர். சிறையில் இருந்தபோது, தனது சுயசரிதையைத் தொடங்கிய அவர், சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின், அதனை நிறைவு செய்தார். ஒருசில நாவல்களையும் எழுதியுள்ளார். ஜேம்ஸ் ஆலன் என்னும் தத்துவ எழுத்தாளரின் பல படைப்புகளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். திருக்குறள் மற்றும் தொல்காப்பியத்தின் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

எண்ணற்ற நூல்களையும் பதிப்பித்துள்ளார். **மணக்குடவரின் திருக்குறள் உரையை வெளியிடும்போது, அந்நூலின் முகப்பில் "இந்நூலின் எழுத்து, கட்டமைப்பு, அச்சு, மை யாவும் சுதேசியம்" என்று குறிப்பிட்டு, தன் கொள்கையில் உறுதியாக இருந்தார்.**

தனது சொத்து, இளமை, வாழ்நாள் அனைத்தையும் துறந்து, உடல் வருத்தி, கடும் இன்னல்களைப் பெற்று நாட்டின் சுதந்திரத்தைத் தங்கள் உதிரத்தால் உருவாக்கி, விடுதலையை பெற்றுத் தந்த சிதம்பரனாரை நினைவில் வைத்துப் போற்றுவோம்.

செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் மணி மண்டபம் திருநெல்வேலி பொருட்காட்சித் திடலில் அமைக்கப்பட்டு இதயதெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களால் 2005–இல் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு அம்மாவின் அரசும் வ.உ.சிதம்பரனாருக்கு, சரித்திரப் புகழ்பெற்ற சட்டமன்றத்தில் முழு திருவுருவப் படத்தை நிறுவி, அன்னாருக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**டாக்டர் P.சுப்பராயன் அவர்கள்**

1889-ஆம் ஆண்டு தற்போதைய நாமக்கல் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோடு, குமாரமங்கலத்திற்கு அருகேயுள்ள போக்கம்பாளையத்தில் பிறந்த மரியாதைக்குரிய டாக்டர் P.சுப்பராயன் அவர்களையும் இந்த நேரத்தில் நினைவுகூர்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவரது தந்தை திரு. பரமசிவ கவுண்டர், தாயார் திருமதி பாவாயி அம்மாள் ஆவார்கள். டாக்டர் சுப்பராயன் அவர்கள் சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலை பட்டமும், ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டமும்,

அயர்லாந்து டப்ளின் பல்கலைக்கழகத்தில் சட்டப்பயிற்சி பட்டமும் பெற்றார். 1918–ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றத் தொடங்கினார்.

இவர் முதன்முதலில் 1922–ஆம் ஆண்டு நிலச்சுவான்தார்களின் பிரதிநிதியாக சென்னை மாகாண சட்டப்பேரவைக்குத் தேர்தெடுக்கப்பட்டார். பின்னர் 1926–ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். பின்னர் 1930–ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டு சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலித்துக்களுக்கு இந்து ஆலயங்களுக்குள் நுழைய அனுமதி வழங்கும் சட்டத் திருத்தத்தை டாக்டர் P.சுப்பராயன் அவர்கள் ஆதரித்தார். இவர் தமிழ்நாடு அரிஜனர் சேவா சங்கத்தின் தலைவராகவும் பதவி வகித்தார்.

1933–ஆம் ஆண்டு முறைப்படி காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். 1937–ஆம் ஆண்டு சென்னை மாகாணத்திற்கு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு.ராஜகோபாலாச்சாரியார் அவர்களின் அமைச்சரவையில், சட்டம் மற்றும் கல்வித்துறை அமைச்சராக பணியாற்றினார். பின்னர் 1942–ஆம் ஆண்டு நடந்த **‘வெள்ளையனே வெளியேறு’** போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

1946–ஆம் ஆண்டு மீண்டும் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டபோது ஓமந்தூராரின் அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக பணியாற்றினார். 1947-49இல் இந்திய அரசியலமைப்பு சட்டத்தினை இயற்றிய முதலாம் இந்திய நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தார்.

1949-51இல் இந்தோனேசியா நாட்டில் இந்தியத் தூதராகப் பணியாற்றினார். 1954-57 நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக பணியாற்றினார். 1957 மற்றும் 1962–ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தல்களில் திருச்செங்கோடு

தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் ஏப்ரல் 1962 இல் மகாராஷ்டிர மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

டாக்டர் P.சுப்பராயன் அவர்கள் தனது வாழ்நாட்களில் ஒரு சமூக சீர்த்திருத்தாளராக வாழ்ந்தார். எடுத்துக்காட்டாக சுப்பராயன் அவர்களின் ஆட்சிக் காலத்தில் முதன்முறையாக அரசாங்க வேலைகளில் தலித்துக்களுக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் இட ஒதுக்கீடு வழங்கும் **வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அரசாணை** (Communal G.O.1071) அமல்படுத்தப்பட்டது. இவர் நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றும் போது, நாடாளுமன்றத்தால் அமைக்கப்பட்ட முதல் ஆட்சிமொழிக் குழுவின் உறுப்பினராக இருந்தபோது, **ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக தொடர வேண்டும்** என வலியுறுத்தினார்.

செல்வச்செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்திருந்தாலும், சுகபோகமாக வாழாமல், தனது வாழ்நாளை நாட்டின் விடுதலைக்காகவும், அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணித்த டாக்டர் சுப்பராயன் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் அவர்கள்,**

1895–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் நாளில் திண்டிவனத்துக்கு அருகில் இருக்கும் ஓமந்தூர் என்னும் ஊரில் பிறந்த ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார் அவர்கள், அரசியலில் தூய்மை, நேர்மையான நிர்வாகம், மக்கள் நலனுக்கே முன்னுரிமை என்று தமது கொள்கையை வகுத்துக்கொண்டு தமிழ்நாட்டை ஆட்சி செய்து வரலாறு படைத்து, தமிழக மக்களால் “**ஓமந்தூரார்**” என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.

இன்றைய தினம், **இந்த மாண்புமிகு சட்டமன்றப் பேரவையில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் முழு திருவுருவப் படத்தைத் திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைவதோடு பெருமையும் அடைகிறேன்.**

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் –** என்னும் பொதுமறையை வாழ்வியலாகக் கொண்டு வாழையடி வாழையாக விவசாயத்தில் ஈடுபட்டிருந்த குடும்பத்தில் பிறந்த ஓமந்தூரார், இளம் வயதிலேயே சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்; காந்தியச் சிந்தனைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டு காந்தியவாதியாக வாழ்ந்தவர். வெவ்வேறு காலகட்டங்களில் காங்கிரஸ் இயக்கம் நடத்திய உப்பு சத்தியாகிரகப் போராட்டம் (1930), சட்டமறுப்பு போராட்டம் (1932), தனிநபர் சத்தியாகிரகம் (1940), வெள்ளையனே வெளியேறு போராட்டம் (1942) ஆகியவற்றில் தீவிரமாகக் கலந்து கொண்டவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் முதல்வராக 1947–ஆம் ஆண்டு மார்ச் 23 முதல் 1949–ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் தேதி வரை தமிழகத்தை உள்ளடக்கிய சென்னை மாகாணத்தின் முதலாவது முதலமைச்சராகப் பதவி வகித்த பெருமைக்கு உரியவர்.

ஓமந்தூரார் முதலமைச்சராகப் பதவி ஏற்ற பிரிட்டிஷ் இந்தியாவில், அந்தக் காலகட்டத்தில் மாகாண முதலமைச்சர்களின் அந்தரங்கச் செயலாளர்கள் அனைவரும் ஆங்கிலேய ஐ.சி.எஸ். அதிகாரிகளாகவே இருந்தனர். தான் பதவி ஏற்றவுடனேயே ஓமந்தூரார் ஓர் உத்தரவில் ஐ.சி.எஸ். அந்தஸ்து இல்லாத திரு.ஏ.அழகிரிசாமி என்பவரைத் தனது நேர்முக செயலாளராக நியமித்தார்.

இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் ஹைதராபாத் சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைப்பதில் பெரும்பங்காற்றினார். சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என்ற சிந்தனையில் தெளிவு கொண்டிருந்தார்.

அந்தக் காலத்தில், **பட்டியலின மக்கள் நலனுக்கென தனியாக ஒரு துறை என்று இல்லாமல், தொழிலாளர் நலத் துறையின் ஒரு பகுதியாகவே ஹரிஜன நலத்**

**துறை இருந்தது.** ஓமந்தூரார் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அந்தத் துறையைப் பிரித்து, அந்தத் துறைக்கென தனியே ஓர் ஆணையரை நியமித்தார். எனவே, அவர் இன்றைக்கும் **ஆதிதிராவிட நலத்துறையின் தந்தை** என்று அழைக்கப்படுகிறார்.

- ஓமந்தூரார் அவர்கள், முதலமைச்சராகப் பதவி ஏற்றிருந்த காலத்தில் **ஆலயப் பிரவேசத்தை எல்லாக் கோயில்களிலும் முறைப்படுத்த ஒரு தனிச் சட்டத்தை தோற்றுவித்ததை வரலாறு என்றைக்கும் நினைவில் வைத்திருக்கும்.**
- ஆலயப் பிரவேச சட்டம், ஜமீன்தாரி முறை ஒழிப்புச் சட்டம், இந்து சமய அறநிலையச் சட்டம் மற்றும் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் போன்றவை ஓமந்தூரார் அவர்களின் ஆட்சியில் இயற்றப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க சட்டங்கள் ஆகும்.

**ஏற்றம் இறைக்கும் விவசாயிகள் வாழ்வில் ஏற்றம் காண** சிந்தித்தவர் ஓமந்தூரார் அவர்கள். கிணறு வெட்ட மானியம், ஊற்றுநீர்ப் பாசனம், நெல்லுக்குத் தரவாரியாக விலை நிர்ணயம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் அமைத்தது, பயிர்க் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வந்தது, கீழ்பவானி அணைக்கட்டு, வீடூர் அணைக்கட்டு திட்டங்களுக்கு ஒப்புதல், பழைய நீர்நிலைகளை வெட்டுதல் என்று அவர் வகுத்த திட்டங்கள் தமிழ்நாட்டில் வேளாண்மைத் தொழில் செழிக்க வழிவகுத்தன. சாலை ஓரங்களில் புளியமரம், இலுப்பை மரம், அரசமரம், ஆலமரம் நடச் செய்தது போன்ற அற்புதமான திட்டங்கள் ஏராளம்.

எண்ணம், சொல், செயல் என அத்துணை காரியங்களிலும் நேர்மையைப் பிரதிபலித்தவர் ஓமந்தூரார் அவர்கள். பதவி வந்தபோது ஏற்கத் தயங்கினார். பதவியிலிருந்து விலகியபோது, நிலைகுலையவில்லை. மனம் கலங்கவில்லை. விவசாயியாக கோட்டைக்குள் வந்த ஓமந்தூரார் விவசாயியாகவே தம் பண்ணைக்குத் திரும்பினார்.

அரசியலுக்குப் பின், **ஆன்மிகத்தில் ஈடுபட்டாலும் தனது விவசாய வாழ்க்கையை மீண்டும் வாழ ஆசைப்பட்டு, வடலூர் பகுதியில் இருந்த தரிசு நிலங்களை எல்லாம் தனது வியர்வையால் விளைநிலங்களாக மாற்றினார்.**

எளிமை மற்றும் நேர்மைக்கு உதாரணமாய் விளங்கிய ஓமந்தூரார் **25.8.1970** அன்று உடல் நலக் குறைவால் காலமானார்.

ஓமந்தூரார் அவர்கள் மறைந்தாலும் அவர் வழிகாட்டிச் சென்ற நேர்மையான அரசியலை நாம் அனைவரும் முன்னெடுத்துச் செல்வோம்; தமிழ்நாட்டை இந்திய அளவில் மட்டுமல்ல, உலகளவிலும் உயரச் செய்வோம்.

நாட்டிற்காக உழைத்த கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், டாக்டர் P.சுப்பராயன் மற்றும் **ஓமந்தூர் பி.இராமசாமி** ரெட்டியார் ஆகிய முப்பெரும் தலைவர்களின் திருவுருவப்படங்கள் இன்றையதினம் மாண்புமிகு அம்மாவின் அரசால் திறந்து வைக்கப்பட்டதை வரலாறு போற்றும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**